வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P .1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 04.09.2024 புதன்கிழமை | இதழ் : 248 | பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# தமிழரின் சுயநிர்ணயம், இறைமையை புதிய அரசமைப்பு மூலம் அங்கீகரிக்குக

## தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு தேர்தல் அறிக்கை

- போர்கால குற்றங்களுக்கு பரிகார நீதி அவசியம்
- சுயநிர்ணய அலகுக்குள் முஸ்லிம்களுக்கும் இடம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 04

**தமிழ் மக்களின் இறைமையும் சுயநிர்ணய உரிமையும் புதிய அரசமைப்பு மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று தமிழ்ப் பொது வேட்பாளரின் சார்பில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் நகரிலுள்ள வேட்பாளரின் பணிமனையில் வைத்து தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது. இதில், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அபிலாசைகள் மற்றும் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கான தீர்வுகள் என

11



## தனக்கு தானே வேட்டு வைத்தது தமிழ் அரசு!

சிறீகாந்தா சாடல்

யாழ்ப்பாணம், செப். 04

ஒற்றையாட்சியை முன்வைத்துள்ள சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் அரசுக் கட்சி கோரியுள்ளமை தனது அத்திபாரத்துக்கே வேட்டு வைக்கும் செயல் என்று தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர், "தமிழினத்துக்கு சுயநிர்ணய உரிமை

11

## தபால் மூல வாக்களிப்பு இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, செப். 04

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இன்று புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக 7 இலட்சத்து 12 ஆயிரத்து 321 அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இன்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனை, மாவட்ட செயலகங்களில் தபால் மூல வாக்குகளை செலுத்த முடியும்.

11

## அரச நிறுவன தலைவர்களுக்கு தேர்தல்கள் குழுவின் அறிவிப்பு

கொழும்பு, செப். 04

அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சொந்தமான சுற்றுலா இல்லங்கள், விடுதிகள் மற்றும் ஓய்வு விடுதிகளை தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் அல்லது வேறு எவருக்கும் வழங்குவதைத் தவிர்க்குமாறு அனைத்து நிறுவன தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு சிறப்பு அறிவிப்பு விடுத்துள்ளது.

அவ்வாறான இடங்களில் தங்கியுள்ளவர்கள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள், வேட்பாளர்களின்

11

## தனியார் துறையினரின் அடிப்படை சம்பளம் உயர்வு!

கொழும்பு, செப். 04

தனியார் துறையின் அடிப்படை சம்பளத்தை 17 ஆயிரத்து 500 ரூபாயாக நிர்ணயிக்கும் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

"வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதன" சட்டமூலத்தின்படி இதுவரை, ஆகக்குறைந்த அடிப்படை சம்பளமாக 12 ஆயிரத்து 500 ரூபாயாக இருந்தது. இது, 5 ஆயிரம் ரூபாயால் அதிகரித்து 17 ஆயிரத்து 500 ரூபாயாக

11



## தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று கொடி!

யாழ்ப்பாணம், செப். 04

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 7ஆம் திகதி முத்தேவியர் திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தங்க ரதத் திருவிழாவும் அடுத்தநாள் 9ஆம்

11

## அநுர வென்றால் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும்!

விக்னேஸ்வரன் எம். பி.



யாழ்ப்பாணம், செப். 04

"அநுரகுமார வெற்றி பெற்றால் இலங்கைத் தீவின் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும். அவரால், நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது" என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

அவரின் இல்லத்தில் நேற்று நடத்திய

11

## விவசாயிகளின் கடன்கள் இரத்து!

கொழும்பு, செப். 04

விவசாயிகள் பெற்றுக் கொண்ட அனைத்து பயிர்ச் செய்கைகளுக்குமான கடன்களையும் உடனடியாக இரத்து செய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பல்வேறு விவசாய சங்கங்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று

11

## நாடு முழுவதும் மருத்துவர்கள் அடையாள வேலைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், செப். 04

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் உள்ள அரச மருத்துவமனைகளின் மருத்துவர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை ஒரு மணி நேரம் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன், நேற்று மதியம் 12 மணிக்கு மருத்துவமனைகளின் முன்பாகக் கூடிய மருத்துவர்கள் கண்டனப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

தொழில்சங்க தலைவர்களுக்கு எதிரான அடக்குமுறை, தேசிய ரீதியான கொள்கையின்றி முறையற்ற ரீதியான மருத்துவக் கல்வியின் விரிவாக்கம், மருத்துவர்களுக்கு எதிரான அநீதியான

11

## சீரழிந்துள்ள தமிழ் தேசிய அரசியலை மக்களின் தீர்ப்பு ஒன்றிணைக்கட்டும்!

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

யாழ்ப்பாணம், செப். 04

சீரழிந்துபோயுள்ள தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமையவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே தமிழ்ப் பொது வேட்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்களிடையே பெரும் ஆதரவு பெருகிவருகிறது. இதைப் பார்த்து

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் 100,907 பேர் வாக்களிக்க தகுதி!

கிளிநொச்சி, செப். 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 907 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று அந்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 108 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. வாக்கெண்ணும் பணிக்காக பழைய மாவட்ட செயலக வளாகத்தில் 8 நிலையங்கள் தயார்ப்படுத்தப்படுகின்றன.

புதன்கிழமை (இன்று) முதல் நடைபெறவுள்ள தபால் மூல வாக்களிப்புக்காக 3,656 அரச உத்தியோகத்தர்கள் தகுதி பெற்றுள்ளார்கள். அவர்களுக்காக 96 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இன்று புதன்கிழமையும் பொலிஸார் 4 மற்றும் 6ஆம் திகதியும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் 5, 6ஆம் திகதிகளில் வாக்களிக்கும் வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த நாட்களில் அவசர வேலை உள்ளிட்ட தவிர்க்க முடியாத காரணத்தால் வாக்களிப்பை தவறவிடுகின்ற உத்தியோகத்தர்கள். 11, 12ஆம் திகதிகளில் பழைய மாவட்ட செயலகத்தில் தமது வாக்கை செலுத்த முடியும்.

இதேவேளை, வாக்காளர்கள் அனைவரும் நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறும் இறுதிநேரம் வரை காத்திருக்காது வாக்குரிமையை பயன்படுத்துமாறும் இதன்போது அவர் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 3 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் கிளிநொச்சி மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் தெரிவித்தார். (ஐ)



# யாழ். சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி குறித்து உரையாடல்!

யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்கான நீர் வசதிகள், மின்சாரம் வசதிகள், காணி அபிவிருத்தி மற்றும் சுற்றுலா அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், விமானப் படை அதிகாரிகள், ஏவியேஷன் நிறுவன உதவி முகாமையாளர், பலாலி விமான நிலைய செயல்பாட்டு முகாமையாளர், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பின் உதவிப் பணிப்பாளர், தொழில்துறைத் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம் சந்தைப்படுத்தல் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# மீன்பிடி படகு கப்பலுடன் மோதி ஆழ்கடலில் விபத்து

## 3 மீனவர்கள் மாயம்

கொழும்பு, செப். 04

காலி மீன்பிடி துறைமுகத்தை அண்மித்த ஆழ்கடல் பகுதியில் கப்பலொன்றுடன் மோதி மீன்பிடி படகொன்று விபத்துக்குள்ளானதில் 3 மீனவர்கள் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர்.

இதன்போது மீட்கப்பட்ட மேலும் 4 மீனவர்கள் நெடுநாள் மீன்பிடி படகொன்றின் மூலம் கரைக்கு அழைத்து வரப்படுவதாகவும் அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி 7 மீனவர்களுடன் கடற்றொழிலுக்காகச் சென்றிருந்த நிஹதமாணி - 1 என்ற நெடுநாள் படகே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (அ)

# முல்லைத்தீவில் 86,889 பேர் வாக்களிக்க தகுதி

முல்லைத்தீவு, செப். 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முல்லைத்தீவு மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் பொலிஸார் விசேட பூசை வழிபாடு

முல்லைத்தீவு, செப். 04

158ஆவது பொலிஸ் தின நிறைவை முன்னிட்டு முல்லைத்தீவு திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் மாங்குளம் பொலிஸார் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

தொடர்ந்த குறித்த பகுதியில் சிரமதானப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் மாங்குளம் பொலிஸில் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# கரையொதுங்கிய திமிங்கலம் நேற்று காலை உயிரிழந்தது!

கொழும்பு, செப். 04



களுத்துறை - பாணந்துறை கற்கரை யில் கரையொதுங்கிய 15 அடி நீளமுடைய திமிங்கலம் நேற்று காலை உயிரிழந்ததாக பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் தெரிவித் தனர்.

சுமார் 2 தொன் நிறையுடைய இந்தத் திமிங்கலம் கரையொ துங்கிய சில மணி நேரங்களிலேயே உயிரி ழந்தது.

இந்த திமிங்கலத்தின் உட லில் பல காயங்கள் காணப்பட் டன என் றும் தெரிவிக்கப்பட் டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நூல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 04

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக் குறள் உரையும் விளக்கமும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையையும் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரையையும் வழங்குவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி தலைமையில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ. இளங்கோவன் பிரதம அதிதியாகவும் நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாசன், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலம்புரி நாளிதழ் ஆசிரியர் ந. விஜயசுந்தரம் வெளியீட்டுரையையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி [illegible] ஆற்றுவர்.

# அழகுக் கலை நிலையத்தை சேர்ந்த மூவரை கைது செய்யுமாறு உத்தரவு!

கொழும்பு, செப். 04

தலைமுடியை அழகுபடுத்த சென்ற பெண்ணுக்கு தலைமுடி உதிருமளவுக்கு கிறீம் வகைகளை பயன்படுத்திய அழகுக் கலை நிலையத்தின் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் இருவரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கம்பஹா - மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றமே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

மினுவாங்கொடையை சேர்ந்த 35 வயது பெண் ஒருவர் திருமண நிகழ்வுக்கு செல்வதற்காக தலைமுடியை அழகுபடுத்த கடந்த 30ஆம் திகதி அந்தப் பகுதியிலுள்ள அழகுக் கலை நிலையத்துக்கு சென்றுள்ளார்.

அந்த அழகுக் கலை நிலையத்தின் பணியாளர்கள் இருவர் அந்தப் பெண்ணின் தலைமுடியில் கிறீம் வகைகளை பூசியுள்ளனர். இதன் பின்னர் பெண்ணின் தலைமுடி உதிர ஆரம்பித்துள்ளது.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதையடுத்து அழகுக் கலை நிலையத்தின் உரிமையாளரும் இரண்டு பணியாளர்களும் அந்தப் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# ஹெரோயின் விற்றவருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு!

கொழும்பு, செப். 04

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

59 வயதுடைய நபரொருவருக்கே இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு,

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி, கடந்த 2021ஆம் ஆண்டு கல்கிசை வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்து. தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையை விதித்தார். (ஐ)

# 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்பு; பேச்சு இணக்கமின்றி முடிந்தது

கொழும்பு, செப். 04

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளத்தை ரூ. 1,700ஆக அதிகரிப்பது தொடர்பான பேச்சு இணக்கமின்றி நிறைவடைந்துள்ளது.

சம்பள நிர்ணய சபையுடனான இந்தப் பேச்சு சுமார் நான்கரை மணி நேரம் நீடித்த நிலையில் இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை.

இதேவேளை, மீண்டும் 10ஆம் திகதி நிர்ணய சபையை கூட்டுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
04.09.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆவணி 19

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தலைமையற்ற தமிழ் அரசு கட்சி

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை யார்? இப்படியொரு கேள்வியை கேட்டால், கொடுப்புக்குள் சிரித்துக் கொள்வதை மட்டுமே தமிழ் அரசுக் கட்சியினர் பதிலாகத் தருகின்றனர். ஒருகாலத்தில் ஆளுமைமிக்க அரசியல்வாதிகளின் பாசறையாக இருந்த தமிழ் அரசுக் கட்சி தற்போது தலைமை என்னும் சொல்லை உச்சரிக்கக்கூட தகுதி இல்லாதவர்களிடம் சிக்கிச் சிதைந்து கொண்டிருக்கின்றது.

இரா. சம்பந்தன் தலைவராக இருக்கின்றபோது, பல விமர்சனங்கள் இருந்தபோதிலும்கூட தமிழ் அரசுக் கட்சி கீழ்நிலைக்குச் சென்றிருக்கவில்லை. ஒப்பீட்டடிப்படையில் சம்பந்தனின் தலைமைத்துவமே அதற்கான காரணம். ஏனெனில், சம்பந்தன் தீர்மானிக்கும் இடத்தில் இருந்தவரைக்கும் கட்சிக்குள் எவராலும் சம்பந்தனை மீறி முகம் காட்ட முடிந்திருக்கவில்லை. ஆனால், “அண்ணன் எப்போது காலியாவான் திண்ணை எப்போது காலியாகும்”, என்பதுபோல, பலர் முகம் காண்பிக்க முற்பட்டனர். கட்சிக்கான புதிய தலைவருக்கான போட்டியில் இரண்டு பேர் போட்டியிடத் தீர்மானித்தபோதே கட்சியின் எதிர்காலம் ஊசலாடத் தொடங்கிவிட்டது.

சிறீதரன் வெற்றி பெற்றமையைத் தொடர்ந்து கட்சிக்குள் இரண்டு அணிகள் என்பது நிரந்தரமானது. இதன் விளைவுதான் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்தும் - எதிர்த்தும் தமிழ் அரசுக் கட்சிக்குள் அணிகள் உருவாகின. ஒருவேளை கட்சிக்குள் பிளவு ஏற்படாது இருந்திருந்தால், தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு ஆதரவான பார்வை கட்சிக்குள் ஏற்பட்டிருக்காது. ஏனெனில், முள்ளிவாய்காலுக்கு பின்னரான மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தென்னிலங்கை வேட்பாளர்களை எவ்வித உடன்பாடும் இல்லாமலேயே ஆதரித்திருந்தது. அதாவது, வெற்றுக் காசோலையில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை அடமானம் வைத்தது. இப்போதும் அதனையே மேற்கொண்டிருக்கின்றது.

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தீர்மானத்தையும் முன்னரைப் போன்றே மேற்கொண்டிருக்கின்றது. சஜித் பிரேமதாஸ இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவைக் கோரியிருக்கவில்லை. ஆனால், சஜித் பிரேமதாஸவுடன் உடன்பாடு செய்திருக்கும் ஏனைய மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் அனைத்துமே தெளிவான புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில்தான் தங்களின் ஆதரவை வழங்கியிருக்கின்றன. ஆனால், தமிழ் மக்களுக்கு சமஷ்டி தீர்வை பெற்றுத் தரப் போவதாகக் கூறிவரும் இலங்கை தமிழ் அரசு கட்சி எவ்வித உடன்பாடும் இல்லாமல் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது. இவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்ளும்போது தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்று வெளியில் அறியப்படும் மாவை சேனாதிராசா கூட்டத்தில் பங்கு கொண்டிருக்கவில்லை. பின்னர், “எனக்கு எதுவும் தெரியாது, அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது”, என்றார் - ஆனால், மறுதினமே தலைகீழாக அறிக்கையிட்டிருந்தார். மாவை சேனாதிராசா தலைமைக்கான மனோநிலையில் இல்லை என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சி எந்தளவுக்கு தலைமையற்ற கட்சியாக சீரழிந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். தனிநபர்களின் கதிரை ஆசைக்காக கட்சியின் சுவாசம் குறைந்து கொண்டே செல்கின்றது. ஆனால், அதனைத் தடுப்பதற்கான ஆளுமையற்ற இயாலாவாளியாகவே மாவை சேனாதிராசா இருக்கின்றார் - ஆகக் குறைந்தது, கட்சியின் உண்மையான நிலைமையை புரிந்துகொள்ளக்கூட மாவையால் முடியவில்லை.

# சிறப்புற நடந்தது வடமராட்சி கிழக்கு பண்பாட்டு பெருவிழா!

வடமராட்சி, செப். 04

வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நேற்று திங்கட்கிழமை வடமராட்சியில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுத்தன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தி தலைமையில், விருந்தினர்கள் மாலை அணிவித்து மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் காலை 9.00 மணியளவில் நிகழ்ச்சி ஆரம்பமானது.

பண்பாட்டு பெருவிழாவில், அரங்க திறப்பு, கிராமிய பாடல்கள், ஓகன் இசை, சிவதாண்டவம், சிந்துநடைக்கூத்து, நாட்டுக்கூத்து, கலைஞர் கௌரவிப்பு போன்றன நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதி பணிப்பாளர் திருவாட்டி லாகினி நிருபராஜ் மற்றும் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஓய்வு நிலை ஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

கௌரவ விருந்தினர்களாக, யாழ்ப்பாண மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணாலினி விஜயரத்தினம், மூத்த கலைஞர்களான கலைச்சாகரம் செல்லையா பரமானந்தம், அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா ஆகியோர் பங்கேற்றனர்.

பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் என மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-2)

# இலஞ்ச தடுப்பு ஆணைக்குழுவால் கிளிநொச்சியில் இருவர் கைது!

கிளிநொச்சி, செப். 04

கரைச்சி பிரதேச சபையின் வருமான வரி உத்தியோகத்தர்கள் இருவர் நேற்று செவ்வாய்க்கிழமை இலஞ்சம், ஊழல் தடுப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் இலஞ்சம் பெற்று வருகின்றனர் என்று இலஞ்சம், ஊழல் தடுப்பு ஆணைக் குழுவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய கொழும்பிலிருந்து கிளிநொச்சி வந்த அதிகாரிகள் இருவரையும் கைது செய்தனர்.

உருத்திரபுரம் பகுதியில் கைது செய்யப்பட்ட இருவரும் ஆணைக்குழு அதிகாரிகளால் மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இரு உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்ட தகவலை கரைச்சி பிரதேச சபை செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (ஐ)

# மனைவியை சேர்த்து வைக்குமாறு கோரி மரத்திலேறி போராடிய நபர்!

வவுனியா, செப். 04

மனைவியை தன்னுடன் சேர்த்து வைக்கு மாறு கோரி வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாக ஒருவர் மரத்திலேறி போராட்டத் தில் ஈடுபட்டார். இதனால் வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று செவ் வாய்க்கிழமை காலை பரபரப்பு ஏற்பட்டது.



இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - பண்டாரிக்குளத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரத்திலேறி போராட்டத்தில் ஈடுபட்டார். தனது மனைவி தன்னைவிட்டு பிரிந்து சென்று விட்டார் என்றும் அவரை தன்னுடன் சேர்த்து வைக்குமாறு கோரியே அவர் மரத்திலேறி போராட்டத்தில் ஈடுபட்டார்.

நீண்டநேரம் மரத்திலிருந்து இறங்காமல் போராடியவரை ஒருவழியாக பொலிஸார் சமரசம் செய்து அனுப்பி வைத்தனர். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 04 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 19
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப்போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பாராட்டப்படுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கன்னி**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**விருட்சிகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சியால் முன்னேறுவீர்.

**தனுசு**
இதுவரை இருந்த சோர்வு, அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மீனம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர், வியாபாரத்தில் இராஜதந்திரத்தால் லாபத்தை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

# கொள்கைகளை விட்டுக்கொடுத்து பா. ஜ. கவிடம் நிதி பெறாது தி. மு. க.

## அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதி

திருச்சி, செப். 04

தி. மு. க. தனது கொள்கைகளை விட்டுக்கொடுத்து மத்திய பா. ஜ. க. அரசிடமிருந்து நிதியைப் பெறாது என்று தமிழக கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

திருச்சியில் செய்தியாளர்களைச் சந்தித்த அன்பில் மகேஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பி. எம். சிறீ திட்டத்துக்காக நாங்கள் பணம் கேட்கவில்லை. சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்துக்காகத் தான் பணம் கேட்கிறோம். எனவே, இதையும் அதையும் முடிச்சுப்போடாமல், தயவுகூர்ந்து நிதியை கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்டோமே தவிர, எந்தக் காரணம்



கொண்டும் கொள்கையை விட்டுக்கொடுத்து மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற மாட்டோம்- என்றார். (எ)

# வாக்குறுதியை மறந்த அரசாக தி. மு. க. அரசு செயல்படுகிறது

## ஸ்டாலின்மீது ஓ. பி. எஸ். கடும் சாடல்

சென்னை, செப். 04

கொடுத்த வாக்குறுதியையே நிறைவேற்றாத அரசாக தி. மு. க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்றும்அனைத்து அரசு மருத்துவர்களுக்கும் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இணையான சம்பளம் வழங்க தி. மு. க. அரசு முன்வர வேண்டும் என்றும் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஓ. பி. எஸ். வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாடு முழுவதும் உள்ள அனைத்து பயிற்சி மருத்துவர்கள், முதுநிலை மருத்துவ மாணவர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு டில்லி, எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இணையான சம்பளம் வழங்க தேசிய மருத்துவ ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், கொடுத்த வாக்குறுதியையே நிறைவேற்றாத அரசாக தி. மு. க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது. தி. மு. க. ஆட்சி அமைந்தவுடன் அரசு மருத்துவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார் ஸ்டாலின். ஆனால், மூன்றாண்டுகள் கடந்தும் இன்றும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று ஓ. பி. எஸ். விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# "ஆன்மீக மாநாடு இல்லை இந்து விரோத மாநாடுதான்"

கும்பகோணம், செப். 04

முருகக் கடவுளை வைத்து அரசியல் செய்வதை இந்துக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று பா. ஜ. க. தேசிய செயலாளர் எச். ராஜா தெரிவித்துள்ளார்.

பழனியில் நடைபெற்றது ஆன்மீக மாநாடு இல்லை என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார். அவர் சரியாகத்தான் கூறியுள்ளார், அந்த மாநாடு இந்து விரோத மாநாடு தான். முருகக் கடவுளை வைத்து அரசியல் செய்வதை இந்துக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்- என்றார்.

கும்பகோணம் மடத்துத்தெருவில் இந்து மக்கள் கட்சி சார்பில் விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, 10 அடி உயரத்தில் குலதெய்வ வழிபாடு காக்கும் விநாயகர் சிலை பிரதிஷ்டை நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# விஜயின் கட்சி மாநாடு தொடர்பில் 21 கேள்விகளை எழுப்பிய பொலிஸ்

விழுப்புரம், செப். 04

விக்கிரவாண்டியில் 23ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் மாநில மாநாட்டுக்கு செய்யப்படவிருக்கும் ஏற்பாடுகள் குறித்து 21 கேள்விகள் அடங்கிய கடிதத்தை அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்துக்கு விழுப்புரம் மாவட்ட பொலிஸ் நிலையம் அனுப்பியுள்ளது. இந்தக் கேள்விகளுக்கு 5 நாட்களுக்குள் பதிலளிக்கவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதலாவது மாநில மாநாட்டை விக்கிரவாண்டியில் செப்ரெம்பர் 23ஆம் திகதி நடத்துகிறார் நடிகர் விஜய். இந்த நிலையில்,

1 மாநாடு நடைபெறும் நேரம் குறிப்பிடப்படவில்லை, எனவே, மாநாடு எந்த நேரம் தொடங்கி எந்த நேரம் முடிக்கப்படும்?

2. மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் விவரம்?

3. மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ள இடத்தின் உரிமையாளர்கள் யார்? அவர்களிடம் முறையாக அனுமதி பெறப்பட்டுள்ளதா?

4. மாநாட்டில் கலந்து கொள்ளும் முக்கிய நபர்கள் பெயர் பட்டியல்.

5. மாநாடு மேடையின் அளவு என்ன? எத்தனை நாற்காலிகள் மேடையில் போடப்பட உள்ளன? மேடையில் பேசவிருக்கும் நபர்களின் பெயர் விவரம்.

6. மாநாட்டில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு எவ்வளவு நாற்காலிகள் போடப்படவுள்ளன?

07 கட்சியின் தலைவர் மற்றும் முக்கிய நபர்கள் விழா மேடைக்கு செல்லும் வழித்தடம் பற்றிய விவரம் உள்ளிட்ட 21 கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. (எ)

# வணிக நோக்கத்துக்கான இடமாக இந்து கோவில்களை கருதக்கூடாது

மதுரை, செப். 04

இந்துக் கோவில்களில் பிரசாதங்களை அறநிலையத் துறையே தயாரித்து பக்தர்களுக்கு வழங்க வேண்டும். கோவில்களை வணிக நோக்கத்துக்கான இடமாக கருதக் கூடாது என்று உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

[illegible] கோவிலில் பிரசாதங்களை [illegible] ஏல விற்பனை அறிவிப்பை இரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

இந்தியா பலவிதமான கோவில்களால் அழகுடன் காணப்படுகிறது. இந்தக் கோவில்கள் நம் நாட்டை மத ரீதியாக வளமாக்குவது மட்டுமல்லாமல், வரலாற்றுப் பெருமையையும் நிரப்புகிறது. கோவில்கள் கட்டடக்கலை அதிசயங்கள் மட்டுமின்றி, சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கின்றன. கோவில்கள் மத வழிபாடு மற்றும் சமூக தொடர்புகளின் மையங்கள். இவை வழிபாட்டின் ஒரு பகுதியாக இருப்பதோடு பக்தர்களுக்கு நிறைவையும் தருகின்றன என்று நீதிபதி சுட்டிக்காட்டினார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் இம்முறை புதிதாக 2,463 வாக்காளர்கள்!

**பதில் அரச அதிபர் பிரதீபன் தகவல்**

யாழ்ப்பாணம், செப். 04

**யாழ். மாவட்டத்தில் இம்முறை 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் புதிய வாக்காளர்களாக 2ஆயிரத்து 463 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதிபன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலை நீதியானதும் நியாயமான தேர்தலாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

வாக்காளர் அட்டைகள் பிரதம தபால் அலுவலகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றிலிருந்து வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு கிடைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்கள் வாக்களிப்புக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ் மதிய கல்லூரியில் 41 வாக்கு எண்ணும் நிலையங்களும் தபால் மூல வாக்களிப்பு எண்ணும் 14 நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வாக்காளர் அடையாள அட்டை கிடைக்காதவர்கள் உரிய காலப்பகுதியில் தங்கள் பிரதேச தபால் நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும்-என்றார். (அ)

# இரண்டு குழுக்கள் மோதல் ஒருவர் பலி! நால்வர் காயம்!!

கொழும்பு, செப். 04

இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பரசன்கஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பயிரிக்குளம் பகுதியில் பதிவாகியுள்ளது.

அநுராதபுரம், தன்னாயன்குளம் பகுதியை சேர்ந்த 30 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மிஹிந்து மாவத்தை, பரசன்கஸ்வெவ பகுதியில் உள்ள தனது நண்பரின் வீட்டில் தங்கியிருந்தபோது, நண்பருடன் கருத்து வேறுபாட்டில் இருந்த சிலர் அவரது வீட்டுக்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, இரு குழுக்களும் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோதலில் காயமடைந்த இரு தரப்பையும் சேர்ந்த நான்கு பேர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில், அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பரசன்கஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வாகனங்களில் தேர்தல் பிரசார விளம்பரங்கள்!

**பொலிஸார் எச்சரிக்கை**

கொழும்பு, செப். 04

அரசியல் கட்சிகளின் பிரசார விளம்பரங்களை வாகனங்களில் காட்சிப்படுத்துவதற்கு எதிராக வாகன உரிமையாளர்களுக்கு பொலிஸ் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில்-

அரசியல் கட்சிகளின் பிரசார விளம்பரங்களை வாகனங்களில் காட்சிப்படுத்துவது சட்ட விரோதமானது. விளம்பரங்களுடன் காணப்படும் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு விளம்பரங்கள் அகற்றப்படும்.

ஒட்டப்பட்ட ஸ்ரிக்கர்கள் அல்லது சுவரொட்டிகளை அகற்றும் போது வாகனங்களுக்கு சேதம் ஏற்படலாம். பொலிஸாரின் தலையீட்டைத் தவிர்க்க வேண்டுமாயின், தானாக முன்வந்து இந்த விளம்பரங்களை அகற்ற வேண்டும்-என்றார். (அ)

# பிரான்ஸ் செல்ல முயன்ற யாழ். இளைஞன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, செப். 04

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வர்த்தக வகுப்பு வசதிகளை பயன்படுத்தி பிரான்ஸுக்கு செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் எல்லை அமுலாக்கல் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், உடுவில் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 36 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன் தினம் மாலை 06.50 மணியளவில் வர்த்தக வகுப்பு வசதிகளை பயன்படுத்தி சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் டோஹாவுக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் இந்த இளைஞனின் கடவுச்சீட்டை சோதனையிட்டு பார்த்தபோது குறித்த கடவுச்சீட்டு போலியானது என தெரியவந்துள்ளது.

மேலும், இளைஞனின் பயணப் பையில் இருந்த இத்தாலி கடவுச்சீட்டில் பல போலி முத்திரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# வாக்காளர்களை தெளிவூட்டும் பயிற்சிப்பட்டறை வவுனியாவில்

வவுனியா, செப். 04

வவுனியாவில் கபே அமைப்பினால் வாக்காளர்களை தெளிவூட்டும் செயற்றிட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், அநுராதபுரம், பொலனறுவை மற்றும் திருகோணமலை ஆகிய 6 மாவட்டங்களில் இருந்து மாவட்டத்திற்கு இருவர் வீதம் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பயிற்சிவிக்கப்பட்டதன் பின்னர் அவர்களது மாவட்டங்களில் வாக்காளர்களை தெளிவூட்டும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. குறித்த பயிற்சிப்பட்டறை வவுனியா தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இன்றைய பயிற்சி பட்டறையில் கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் மற்றும், வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் இணைப்பாளர் பிரேமபந்து ஜயதிலக மற்றும், சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த செயற்றிட்டத்தில் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி, தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியினில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் கடமைகள் அதே போன்று வாக்களிக்கின்ற முறைமைகள், வாக்களிப்பில் இளைஞர்களின் ஆர்வத்தை அதிகரிப்பது போன்ற விடயங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. (அ)

# பிறப்பு,இறப்பு,திருமண சான்றிதழ்களை இணையம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

கொழும்பு, செப். 04

பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை இணையத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள புதிய முறையை பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் வெளிவிவகார அமைச்சில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளது.

நிகழ்வொன்றின்போது பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, தொடர்புடைய சேவைகளுக்கான தேவையால் அதிக மக்கள் கூட்டம் மற்றும் ஒரே இரவில் வரிசைகள் திரண்டன. இந்த சிக்கலை தீர்க்க, அரசாங்கம் இணையத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளும் eChanneling புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது பொதுமக்களின் சிரமத்தை கணிசமாகக் குறைக்கிறது.

மேலும், தற்போது 50 தொடக்கம் 55 சதவீத ஆவணங்களுக்கான இணைய சான்றிதழை இந்த முறை மூலம் நிறைவேற்ற முடியும்-என்றார். (அ)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து 2,098 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, செப். 04

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 02 ஆம் திகதி வரை) 2,098 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 754 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,266 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 14 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 64 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

# 7,500 ஆசிரியர்களுக்கு ரோபாட்டிக்ஸ் செயற்கை நுண்ணறிவுப் பயிற்சிகள்

கொழும்பு, செப். 04

ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு அறிவியல் துறையில் 7,500 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன-

தகவல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் உள்ளிட்ட "ஸ்டெம்" கருத்தாக்கம் தொடர்பில் திறன்கள் தொழில்நுட்பக் கல்லூரி ஊடாக மூன்று நிலைகளில் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 7,500 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சரினால் முன் வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது-என்றார். (அ)

# மக்களின் காணி பிரச்னை; ஆராயும் கலந்துரையாடல்

கிளிநொச்சி, செப். 04

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், மக்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல், நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், மக்கள் எதிர்நோக்கும் காணி தொடர்பான பிரச்னைகளை, சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் கேட்டறியும் கலந்துரையாடல், இன்று, கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் காணிப் பிரிவுக்கான தலைவர் இரத்தினசிங்கம் முரளீதரன் மற்றும் பலர் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வடக்கு-கிழக்கில் தபால் வாக்காளர்கள் சங்கு சின்னத்துக்கு ஆதரவு தரவேண்டும்!

## கோவிந்தன் கருணாகரம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, செப். 04

**தமிழரசு கட்சியின் சஜித்தை ஆதரிக்கும் அறிவிப்பானது எமது பொது வேட்பாளர் விடயத்தை பாதிப்படையச் செய்யும். வடக்கு கிழக்கில் இருக்கும் தமிழ் மக்கள் (தபால்) வாக்காளர்கள் எமது சங்கு சின்ன வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் வேண்டுகோள் விடுத்தார்.**

இந்த வாரம் இடம்பெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிக்கும் வாரமாக இருப்பதனால் வடக்கு-கிழக்கில் இருக்கும் தமிழ் மக்கள் உறுதியாக தபால் மூலம் வாக்களிக்க உள்ள வாக்காளர்கள் எமது சங்கு சின்ன வேட்பாளருக்கு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் அவர் கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பொது வேட்பாளர் விடயத்தில் சிவில் சமூக அமைப்பினர் நமக்கு ஒரு உத்தரவாதத்தினை வழங்கியிருந்தனர். தமிழரசு கட்சியையும் இந்தக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்து எமது பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற விடயத்தில் தெரிவித்திருந்தனர்.

ஆனால் தமிழரசு கட்சிக்குள்ளேயே இவ்விடயம் சம்பந்தமாக இரு வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இருப்பினும் நேற்று இடம்பெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு தமது ஆதரவை தெரிவிப்பதாக அறிவித்திருந்தனர்.

இந்த அறிவிப்பானது எமது பொது வேட்பாளர் விடயத்தை பாதிப்படையச் செய்யும் இதற்குரிய முடிவை மக்கள் உரிய காலத்தில் வழங்குவார்கள்.

தமிழரசு கட்சியின் சஜித்தை ஆதரிக்கும் அறிவிப்பானது எமது பொது வேட்பாளர் விடயத்தை பாதிப்படையச் செய்யும். வடக்கு கிழக்கில் இருக்கும் தமிழ் மக்கள் (தபால்) வாக்காளர்கள் எமது சங்கு சின்ன வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இந்த வாரம் இடம்பெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிக்கும் வாரமாக இருப்பதனால் வடக்கு-கிழக்கில் இருக்கும் தமிழ் மக்கள் உறுதியாக தபால் மூலம் வாக்களிக்க உள்ள வாக்காளர்கள் எமது சங்கு சின்ன வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இந்த பொது வேட்பாளர் விடயத்தில் சிவில் சமூக அமைப்பினர் நமக்கு ஒரு உத்தரவாதத்தினை வழங்கியிருந்தனர். தமிழரசு கட்சியையும் இந்தக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்து எமது பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற விடயத்தில் தெரிவித்திருந்தனர். ஆனால் தமிழரசு கட்சிக்குள்ளேயே இவ்விடயம் சம்பந்தமாக இரு வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இருப்பினும் நேற்று இடம்பெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு தமது ஆதரவை தெரிவிப்பதாக அறிவித்திருந்தனர்.

இந்த அறிவிப்பானது எமது பொது வேட்பாளர் விடயத்தை பாதிப்படையச் செய்யும். இதற்குரிய முடிவை மக்கள் உரிய காலத்தில் வழங்குவார்கள்-என்றார். (அ)

# அநுரவிடம் வேலைத்திட்டம் இல்லை சஜித் பிரேமதாஸ ஒரு கிளிப்பிள்ளை!

## நிமல் சிறிபால டி சில்வா சாடல்

கொழும்பு, செப். 04

"அநுரகுமார திஸாநாயக்கவிடம் நாட்டுக்கான எந்த வேலைத்திட்டமும் இல்லை. அவர்களது கட்சியினர் தமக்கு எதிரான தரப்பினரின் வீடுகளை எரிக்க காத்திருக்கின்றனர். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது." - என்று சுதந்திரக் கட்சித் தலைவரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ரணில் விக்கிரமசிங்கவை நான் 1989 இல் இருந்து அறிவேன். எங்களுக்கிடையில் அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தன. நானும் அவரை மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். ஆனால் நாடு வீழ்ந்தபோது, நான் அவரை பாராளுமன்றத்தில் மின்தூக்கிக் கருகில் சந்தித்தேன்.

அனைத்துக் கட்சி மாநாடு நடத்தி, நாடு வீழ்ந்தபோது தலைமைப் பொறுப்பை ஏற்க பொருத்தமான ஒருவரைத் தேடலாம் என்று கூறினார். அந்த அனைத்துக் கட்சி மாநாட்டிற்கு அவர் வருகை தந்தார். நீங்கள் பதவிக்குப் பின்னால் செல்லும் நபரல்ல. மேலும் அவர் குடும்பத்திற்காக செயற்படும் அரசியல்வாதியுமல்ல.

சுதந்திரக் கட்சி தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. நாட்டின் நலனுக்காக நாம் முடிவுகளை எடுக்க வேண்டும். ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்த வேண்டும் என மத்திய குழுவில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நடைமுறைச்சாத்தியமான தீர்மானத்தை நாம் எடுத்தோம். நான் தேர்தலில் போட்டியிட வேண்டும் என சிலர் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுரகுமார திஸாநாயக்கவிடம் நாட்டுக்கான எந்த வேலைத்திட்டமும் இல்லை. அவர்களது கட்சியினர் தமக்கு எதிரான தரப்பினரின் வீடுகளை எரிக்க காத்திருக்கின்றனர். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. சஜித் கிளிப்பிள்ளை போல் பேசுகிறார். நாடுபூராவும் சென்று பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றி வருகின்றனர்-என்றார். (அ)

# பொதுமக்களுக்கு சுமை இல்லாத அரசாட்சியை கட்டி எழுப்புவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, செப். 04

அதிகாரத்திற்கு வந்த பிறகு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை தன்னிச்சையாக பயன்படுத்துவதில்லை. இது பதவி அல்ல. மக்களின் வரத்தின் ஊடாக மக்கள் சேவகனாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவேன். நிறைவேற்று ஜனாதிபதி என்பது வரி செலுத்துகின்ற மக்களிடத்தில் தங்கி இருக்கின்ற ஒருவராகும். அதனால் அதில் சார்ந்திருப்பதிலிருந்து விலகி நிற்பேன். அந்த வட்டத்துக்குள் இருந்து வெளியேறி, புதிய சிந்தனையோடு வங்குரோத்தடைந்த நாட்டை வங்குரோத்து நிலைமையிலிருந்து கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மிஹிந்தலை பிரகடனம் வெளியீட்டு வைபவம் நேற்று முன் தினம் தினம் மிஹிந்தலை ரஜ மஹா விஹாராதிபதி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மகா



சங்கரத்தினருக்கு மத்தியில் மிஹிந்தலை நகரில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்த விதத்திலும் மக்களுக்கு சுமையாக இருக்காது. ஒரு முன்னுதாரணமான அரசாட்சி ஒன்று நடத்தப்படும். மக்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு முன்னர் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். தசராஜ தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு முன்மாதிரியான பணிவான செவிசாய்க்கக்கூடிய அரசாட்சி ஒன்று எமது நாட்டுக்குத் தேவை. அதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் பொறுப்பு எனக்கும் என் கட்சிக்கும் உண்டு

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, செப். 04

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் பொறுப்பு எனக்கும், எனது கட்சிக்கும் உண்டு. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொறுப்பற்ற வகையில் நாங்கள் செயற்படவில்லை. 30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததை போன்று ஊழல் மோசடிகளையும் முடிவுக்கு கொண்டு வருவேன். மக்களால் தாங்கிக் கொள்ள கூடிய நியாயமான வரி கொள்கை அமுல்படுத்தப்படும் என பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை கொழும்பு - ரத்னதீப நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது. இதன் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



ஐந்து சக்திகளை ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்பட்ட சுதந்திர கட்சி கொள்கை ரீதியில் மாறுப்பட்ட தரப்பினருடன் கூட்டணியமைத்ததால் எமது அணியினரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கிருந்தது. இதனால் தான் பஸில் ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்தார்.

நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்க நிபந்தனையில்லாமல் போரிட்டவர்களையும், பௌத்த சாசனத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது பிரதான கொள்கையாகும். பொருளாதார நெருக்கடிக்கு எம்மால் நிச்சயம் தீர்வு காண முடியும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் பொறுப்பு எனக்கும், எனது கட்சிக்கும் உண்டு. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொறுப்பற்ற வகையில் நாங்கள் செயற்படவில்லை. 30 வருடகால யுத்தத்தை நாங்களே முடிவுக்கு கொண்டு வந்தோம்.

சூழ்ச்சிகளினால் எம்மையும், எமது அணியையும் வீழ்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது நாட்டுக்காக சிறந்த தீர்மானங்களை எடுத்தோம். நாட்டை முன்னேற்றும் ஆளுமை மற்றும் திறமை எம்மிடமுள்ளது. எதிர்வரும் 10 ஆண்டுகளில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதற்கான திட்டங்கள் எம்மிடம் உள்ளன- என்றார். (அ)

# "சுமந்திரன் எடுத்துள்ள தீர்மானம் தெற்கு மக்களுக்கு சிறந்த செய்தி"

கொழும்பு, செப். 04

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மக்களை குழப்பும் தீர்மானங்களையே எடுப்பார். அவர் தற்போது அறிவித்துள்ள தீர்மானம் தெற்கு மக்களுக்கு சிறந்த செய்தியாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பம்பலப்பிட்டியவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்தமை தொடர்பில் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

சுமந்திரன் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தனது நிலைப்பாட்டுடன் வேறு குழுவுடனேயே செயற்பட்டு வந்தார். எனவே சுமந்திரன் ஏதேனுமொரு குழுவைத் தெரிவு செய்கின்றார் எனில், நாம் என்ன செய்யவேண்டும் என்பதை தெற்கு மக்கள் சிந்திக்க வேண்டும். சுமந்திரனின் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அதற்கு எதிர்ப்பினை தெரிவித்துள்ளார். இது மக்களை குழப்பும் செயற்பாடாகும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சுமந்திரமே மக்களை குழப்பிக் கொண்டிருந்தார்.

எனவே அவரது தீர்மானங்கள் தொடர்பில் வடக்கு மக்கள் மாத்திரமல்ல, தெற்கு மக்களும் அவதானத்துடன் இருக்க வேண்டும். சுமந்திரன் ஏதேனுமொரு தீர்மானத்தை எடுப்பாரானால் அது தெற்கு மக்களுக்கு சிறந்த செய்தியாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்கு திருட்டில் ஐக்கிய மக்கள் சக்தி; கடந்த காலத்தை மறந்துள்ள ஜே.வி.பி.!

## ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 04

**நாட்டுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதை தற்போதைய அரசாங்கம் நிரூபித்துள்ளதாகவும், அதன்படி புதிய இலங்கையை உருவாக்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

வாக்குகளை திருடும் நிலைக்கு ஐக்கிய மக்கள் சக்தி தள்ளப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஜேவிபி கடந்த காலத்தை மறந்துவிட்டது என்றும், கடந்த காலத்தை மறந்துவிட்டு எதிர்காலத்திற்கு செல்ல முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்லை மொனார்ஷ் இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் 73 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் வீழ்ந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு சுதந்திரக் கட்சி வழங்கிய ஆதரவை ஒருபோதும் மறக்க முடியாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்-

முதன்முறையாக சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் மாநாட்டில் உரையாற்ற கிடைத்திருப்பது கௌரவமாகும். ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். பின்னர் அதிலிருந்து பிரிந்து சென்று சுதந்திரக் கட்சியை நிறுவினார். அப்போது எனக்கு 10 வயது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவை பல தடவைகள் சந்தித்திருக்கிறேன்.

நாட்டை அபிவிருத்தி செய்ய இரு கட்சிகளும் அர்ப்பணித்துள்ளன. எங்களுக்குள் வேறுபாடுகளும் இருந்தன. அதனால் நன்மை தீமை என்ற இரண்டுமே கிட்டியது. கடந்த 75 வருடங்களில் என்ன செய்தோம் என்று இன்று சிலர் கேட்கின்றனர்.

நாங்கள் என்ன சொன்னோம், செய்தோம் என்ற பட்டியல் எங்களிடம் உள்ளது. அதைப் பற்றி பிறகு சொல்கிறேன். அன்றைய அரசாங்கங்கள் இந்த நாட்டில் சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்தின. நல்லதை போன்றே அவதூறுகளையும் ஏற்றுக்கொண்டோம். சில கட்சியினரை போன்று நாங்கள் வரலாறுகளை மறப்பதில்லை. எமது வரலாறு ஒரு இடத்திலும் வெறுமையானதாகவும் காணப்படவில்லை.

நாங்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் எப்போதும் நாட்டைப் பற்றியே சிந்தித்தோம். 2022இல் நாட்டைப் பற்றியே சிந்தித்து செயற்பட்டோம். பாரம்பரிய அரசியல் தலைவர்கள் இருக்கவில்லை. ஒருபுறம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். அதன் பிறகு என்ன நடந்தது? எதிர்க் கட்சித் தலைவரைப் போன்று அனுர திஸாநாயக்கவும் பிரதமர் பதவியை ஏற்கவில்லை. இருவரும் ஓடிவிட்டார்கள்.

ஆனால் நாங்கள் ஒன்றுபட்டு ஆட்சி அமைத்தோம். 2022 ஜூலை 09 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். அதன் பிறகு, நாட்டுக்கு தலைவர் இருக்கவில்லை. நாட்டில் அராஜக நிலை உக்கிரமடைந்து காணப்பட்டது. அன்று நாட்டுக்காக ஒன்றுபட்டதை நினைத்து பெருமைப்படுகிறேன்.

பழைய ரெலிபோனும் திசைகாட்டியும் நாட்டுக்கு என்ன செய்துள்ளன? ஐக்கிய மக்கள் சக்தி தமிழ் கட்சிகளின் வாக்குகளை திருடச் சென்று, அந்த தருணத்திலேயே மாட்டிக் கொண்டுள்ளது. அவர்களால் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. அரசியல் கட்சிகளுக்கு இவ்வாறான செயற்பாடுகள் பொருத்தமானதல்ல.

மேலும் ஜேவிபி கடந்த காலத்தை மறந்த கட்சியாகும். கடந்த காலத்தை அறியாமல் எதிர்காலத்திற்கு செல்ல முடியாது. அவர்கள் செய்ததை மறந்துவிட்டார்கள். அவர்களின் நாட்காட்டியில் 1971 ஆம் ஆண்டு இல்லை. முடிந்தால், அவர்களுக்கு 1971 என்று ஒரு வருடம் இருந்தது என்பதை காட்டுங்கள்.

மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த நாங்கள் இங்கு வந்துள்ளோம். நாட்டை அபிவிருத்தி செய்ய விரும்புகிறோம். இன்று எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்துகளுக்கு வரிசைகள் இல்லை. ஆனால் நான் உருவாக்கிய ஒரே வரிசை செப்ரெம்பர் 21ஆம் திகதி வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லப்போகும் வரிசை மட்டும்தான்-என்றார். (அ)

# தமிழரசுக் கட்சி எடுத்த தீர்மானம் அரசியல் சாணக்கியம் நிறைந்தது

## இராதாகிருஷ்ணன் பாராட்டு

கொழும்பு, செப். 04

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க மேற்கொண்ட தீர்மானத்தை வரவேற்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானமானது அரசியல் சாணக்கியம் நிறைந்தது என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டையும் சிறுபான்மை மக்களையும் சிந்தித்து எடுக்கப்பட்ட தீர்மானமாகவே தாம் இதனைக் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய செயற்பாடானது சிறுபான்மை சமூகத்தின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுகின்றது.

சஜித் பிரேமதாச இந்த நாட்டின் அனைத்து சமூகங்களையும் அரவணைக்கக்கூடியவர்.

மிக விரைவில் வடக்கு-கிழக்கின் ஏனைய சிறுபான்மை கட்சிகளும் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்க முன்வருவார்கள் என இராதாகிருஸ்ணன் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# மீன்பிடி தொழிற்துறையை மேம்படுத்த நடவடிக்கை!

## முல்லைத்தீவில் சஜித் உறுதி



முல்லைத்தீவு, செப். 04

மீன்பிடித் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுகங்கள் நங்கூரமிடக் கூடிய நிலப்பிரதேசங்கள் என்பனவற்றைச் சர்வதேச நிவாரணங்களை மையப்படுத்தி விருத்தியடைய செய்வதோடு, மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தோடு ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி துறையினூடாக மீன்பிடித் தொழிலை உயர்ந்த மட்டத்திற்கு அபிவிருத்தி அடைய செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

விவசாயத்தையும் சுற்றுலாத் துறையையும் மேம்படுத்த வேண்டும்.

வனவிலங்கு பிரதேசங்களை வளமாக மாற்றி, வன ஜீவராசிகளை மையமாகக் கொண்ட சுற்றுலாத் துறைக்கான புதிய வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக சுற்றுலா நகரங்கள் உருவாக்கப்படும்-என்றார்.

# கொள்கையற்ற அரசியல் செயல்பாடுகளே நாட்டின் நெருக்கடி நிலைக்குக் காரணம்

## அனுரகுமார சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 04

கொள்கை ரீதியான அரசியல் செயற்பாடுகள் இன்மையே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குக் காரணம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஹோமாகமை நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொள்கைகள் அற்ற அரசியல் செயற்பாடுகளையே தற்போதைய அரசியல்வாதிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

அன்று ரணில் விக்ரமசிங்கவை விமர்சித்தவர்கள் இன்று அவரது அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர். பொதுஜன பெரமுனவின் குடும்ப ஆட்சி நிறைவடைந்து இறுதியாக ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். பொதுஜன பெரமுன கட்சியின் ஹோமாகம பந்துலவும் ரணிலுடன் உள்ளார். மஹரகம தினேஸ் குணவர்த்தன, கம்பஹா பிரசன்ன ரணதுங்க, கண்டி மஹிந்தானந்த, களுத்துறை ரோஹித்த ஆகியோர் ரணிலின் பக்கம் உள்ளனர். இவர்கள் அனைவரும் ரணிலை விமர்சித்தவர்கள் இந்த அரசியல் கலசாரம் மாற்றப்பட வேண்டும்.

இதனைத் தொடர்ந்தும் முன் கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது-என்றார். (அ)

# படையினரின் உயிர் தியாகத்தை காட்டிக்கொடுக்கத் தயாரில்லை!

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, செப். 04

ஆயிரக்கணக்கான படையினர் உயிர்த்தியாகம் செய்து பாதுகாத்த நாட்டை தேர்தல் வெற்றிக்காக காட்டிக்கொடுக்க முடியாது. அதன் அடிப்படையிலேயே அதிகாரப்பகிர்வுக்கு இடமில்லை என தெளிவாக எடுத்துரைத்துள்ளேன் - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஹபராது பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாமல் ராஜபக்ச மேலும் கூறியவை வருமாறு-

பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்களை அச்சுறுத்தினால் அவர்கள் வெளியில் இறங்கமாட்டார்கள் என சில அரசியல்வாதிகள் நினைக்கின்றனர்.

மொட்டு கட்சி வெற்றிபெறாது என ஒரு புறத்தில் கூறினாலும் மறுபுறத்தில் மொட்டு கட்சி கூட்டத்துக்கு செல்லவேண்டாம் என கட்சி ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். மொட்டு கட்சி தோற்கும் எனில் எதற்காக இப்படி அஞ்ச வேண்டும்?

மொட்டு கட்சிக்கு வாக்குகள் இல்லையெனில் கூட்டத்துக்கு வரும் மக்களை ஏன் மிரட்ட வேண்டும்? இதன்மூலம் எமது வெற்றி உறுதியாகியுள்ளது. நாம்தான் பலமான அரசியல் கட்சியென்பதும் உறுதியாகியுள்ளது. நாம் அஹிம்சை வழியிலேயே தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றோம்.

வாக்குகளைப் பெறுவதற்காக தேர்தல் காலங்களில் போலி வாக்குறுதிகளை வழங்குவதால் மக்கள் பிரச்சினை தீரப்போவதில்லை. அதனால்தான் செய்யக்கூடிய விடயங்களை மட்டும் கூறிவருகின்றோம். அந்த அடிப்படையிலேயே எம்மால் அதிகாரங்களை பகிரமுடியாது என தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். 13 இல் பொலிஸ் அதிகாரத்தை வழங்கமுடியாது.

ஆயிரக்கணக்கான படையினர் உயிர்தியாகம் செய்து வென்றெடுத்த சுதந்திரத்தை, நாட்டை தேர்தல் வெற்றிக்காகவும், வாக்கு வேட்டைக்காகவும் காட்டிக் கொடுக்க முடியாது.

வடக்கு இளைஞர்கள் வெளிப்படைதன்மையை வரவேற்கின்றனர் என நான் நம்புகின்றேன். பொய் வாக்குறுதிகளை அவர்கள் விரும்புவதில்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவு இயந்திரம் மோதி இளம் குடும்பஸ்தர் பலி!

## தலைமறைவான சாரதியை தேடும் பொலிஸார்

ஏறாவூர், செப். 04

**மட்டக்களப்பு- வந்தாறுமூலை பிரதேசத்தில் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். இவரை மோதிய உழவு இயந்திரத்துடன் சாரதி தலைமறைவாகியுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.**



மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவரை பின்னால் வந்த உழவு இயந்திரம் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

வந்தாறுமூலைப் பிரதேசத்தைச்சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 36 வயதுடைய கணேசநாதன் ரகுநாதன் என்பவரே இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

இவர் சுமார் 15 வருடங்கள் மத்திய கிழக்கு நாட்டில் தொழிலாளியாகப் பணியாற்றிவிட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே நாடு திரும்பிய நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏறாவூர் பொலிஸார் உழவு இயந்திர சாரதியை தேடுவதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)



# சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா

சம்மாந்துறை, செப். 03

நாவிதன்வெளி பிரதேசத்தில் விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா நடைபெற்றது.

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி பிரதேசத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா தொடர் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்திய முதல் நிகழ்வு நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி சூரியகுமார் பிரசாந்தினி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. நீலோந்திரன், திணைக்கள வளவாளர் நா. சனாதனன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி ஏற்பாடுகளை மேற்கொண்டார். (எ)





# ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பொது நூலகத்துக்கு வருகை

கல்முனை, செப். 04

வாசிப்பை நேசிப்போம் எனும் தொனிப்பொருளில் கல்முனை கிரீன் பீல்ட் றோயல் கல்லூரி மாணவர்கள் கல்முனை பொது நூலகத்துக்கு வருகை தந்தனர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் அடங்கிய குழு பாடசாலை ஆசிரியர்களுடன் நூலகத்துக்கு வருகை தந்து நூலக செயல்பாடுகளை அவதானித்தனர். (எ)

# விபுலானந்த மணிமண்டபத்தில் களைகட்டியது இசைக் கச்சேரி

காரைதீவு, செப். 04

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி விபுலானந்த மணி மண்டபத்தில் நடத்திய கர்நாடக இசைக் கச்சேரி அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது.

முன்னதாக கலைஞர்கள் சுவாமி விபுலானந்த அடிகளாரின் இல்லத்தில் விசேட பூஜை செய்து அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு பல்கலைக் கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், சிறீ விக்கிரம கீர்த்தி திருமதி கிருபாஞ்சனா கேதீஸ் கலந்து சிறப்பித்தார்.

இந்தியாவில் இசைத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண் (வாய்ப்பாட்டு),




சுதாகரன் கோவிசரண் ( மிருதங்கம்), பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் இந்த கர்நாடக இசைக்கச்சேரியை ஒன்றரை மணி நேரம் முதல் தடவையாக சிறப்பாக நடத்தினர்.

நிகழ்வில் விபுலானந்த பணி மன்ற தலைவர் சோ. சுரநுதன் தலைமையுரையாற்ற செயலாளர் கு. ஜெயராஜி அறிமுக உரையாற்றினார்.

கர்நாடக இசைக்கச்சேரி தொடர்பான நயவுரையை பணி மன்றத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி. ரி. சகாதேவ ராஜா நிகழ்த்தினார்.

இசைக்கச்சேரி நடத்திய மூன்று கலைஞர்களுக்கும் விபுலானந்த பணிமன்றத்தினர் விபுலானந்த அடிகளாரின் திருவுருவப்படம் பொறித்த நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தனர். (எ)

# “எமது உரிமை எமது கையில்” விசேட கலந்துரையாடல்





சாய்ந்தமருது, செப். 04

சாய்ந்தமருது றோட் ரூ ரைட் அமைப்பினருடன் இணைந்து பிரண்ட்ஸ் சேகிள் அமைப்பினர் ஒழுங்கு செய்த “எமது உரிமை எமது கையில்” என்ற தொனிப்பொருளில் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுடனான கலந்துரையாடல் சாய்ந்தமருது சமூக சேவைகள் திணைக்களப் பணிமனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரண்ட்ஸ் சேகிள் அமைப்பின் ஆலோசகரும், முன்னாள் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லாரி அதிபருமான ஏ. பீர்முஹம்மட் பிரதான வளவாளராக கலந்து கொண்டனர். (எ)

# ஆயுள்வேத மருத்துவ முகாம்

மண்முனை, செப். 04

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க அனுசரணையின் கீழ் சத்துருக்கொண்டான் சுதேச ஆயுள்வேத மத்திய மருந்தகத்தால், மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பிரதேச மக்களுக்கு முற்றிலும் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாமொன்று நேற்று கொக்குவில் பல்தேவை கட்டடத்தில் நடைபெற்றது.


பிரதேச மக்களின் தேவை கருதியும், அவர்களின் ஆரோக்கியமான வாழ்வை கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ். சிறிகாந்தின் வேண்டுகோளுக்கிணங்க, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் எம். ஏ. நபீலின் அனுமதியுடன், சத்துருக்கொண்டான் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் வைத்திய அதிகாரி திருமதி எஸ். சஜிதா தலைமையில் இந்த இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இதில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருகை தந்து தங்களது நோய் தொடர்பில் மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெற்றுக் கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 பணயக்கைதிகள் படுகொலை இஸ்ரேலில் பெரும் போராட்டம்!

## போர் நிறுத்தத்துக்கு வலியுறுத்தல்



டெல் அவிவ், செப். 04

**காஸாவில் ஆறு பணயக்கைதிகள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, எஞ்சியவர்களை மீட்க இஸ்ரேலிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அந்த நாட்டின் பல்வேறு நகரங்களில் பெரும் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன. இதனால் நெதன்யாகு தலைமையிலான அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி அன்று தாக்குதல் நடத்தி சுமார் 1,200 பேரைக் கொலை செய்தனர். சுமார், 250 பேரை பணயக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். இந்தச் சம்பவத்தை அடுத்து, ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், பணயக்கைதிகளில் 6 பேரை ஹமாஸ் அமைப்பினர் கொன்றனர். அவர்களின் உடல்களை இஸ்ரேலிய இராணுவம் மீட்டது. இதையடுத்து, இஸ்ரேலிய அரசுக்கு எதிராக அந்த நாட்டின் ஜெருசலேம், டெல் அவிவ் உள்ளிட்ட நகரங்களில் பெரும் போராட்டங்கள் நடைபெற்றன.

ஹமாஸ் உடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் பணயக்கைதிகள் உயிரோடு வந்திருப்பார்கள் என்றும் இஸ்ரேலிய ஆட்சியாளர்களே இதற்கு பொறுப்பு என்றும் கூறி இலட்சக்கணக்கான இஸ்ரேலியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். ஜெருசலேமில், போராட்டக்காரர்கள் வீதிகளை மறித்து பிரதமரின் இல்லத்துக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர். டெல் அவிவின் பிரதான நெடுஞ்சாலைகளில், கொல்லப்பட்ட பணயக்கைதிகளின் படங்களுடன் கொடிகளை ஏந்தியவாறு ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இஸ்ரேலிய தொழிற் சங்கங்களின் அழைப்பை ஏற்று வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதனால், வர்த்தக நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அனைவரும், இஸ்ரேலிய அரசு விரைவாக ஹமாஸ் அமைப்புடன் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்றும் எஞ்சிய பணயக்கைதிகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

பணயக்கைதிகளின் குடும்பங்களுக்கான அமைப்பு, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கடுமையாக கண்டித்துள்ளது. "பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்கள் கடந்த 11 மாதங்களாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்த நிலையில் தற்போது கொல்லப்பட்டனர். அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணம்" என்று அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் காரணமாக 40 ஆயிரத்து 738 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு போதிய தங்குமிட வசதிகள் இல்லாததாலும், உணவு போதிய அளவில் கிடைக்காததாலும் அவர்கள் கடும் நெருக்கடியுடன் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்வதாகவும் அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# ஹெலிகொப்டர் விபத்து; ரஷ்யாவில் 22 பேர் பலி!

மொஸ்கோ, செப். 03

ரஷ்யாவில் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கிய 22 பேர் பலியாகினர்.

ரஷ்யாவின் கிழக்கே கம்சத்கா தீபகற்ப பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரக் கூடிய வகையிலான வச்சகாஜெட்ஸ் என்ற எரிமலை பகுதியுள்ளது. இந்தப் பகுதிக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் சுற்றுலா வருவது வழக்கம்.

இந்த நிலையில், இந்த எரிமலை பகுதியருகே 19 பயணிகள் மற்றும் 3 விமானிகளுடன் மி - 8 ரக ஹெலிகொப்டர் ஒன்று நிக்கோலாயீவ்கா கிராமம் நோக்கி புறப்பட்டது. அந்த ஹெலிகொப்டர் எரிமலை பகுதியருகே, திடீரென விபத்தில் சிக்கியது.

இதில், அந்த ஹெலிகொப்டரில் இருந்த பயணிகள், விமானிகள் உட்பட அனைவரும் உயிரிழந்தனர். (எ)

# முகேஷ் அம்பானியை முந்தினார் அதானி

புதுடில்லி, செப். 03

இந்தியப் பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானியை கௌதம் அதானி முந்தினார். ஹூருன் இந்தியா நிறுவனம் 2024 ஜூலை மாத கணக்குப்படி இந்தியாவின் முதலாவது பணக்காரர் பட்டியலை வெளியிட்டது.

இந்தப் பட்டியலில் 2020இல் 4ஆவது இடத்தில் இருந்த கௌதம் அதானி முதல் இடத்தை பிடித்துள்ளார். அவர் ரிலையன்ஸ் நிறுவனத்தின் முகேஷ் அம்பானியை முந்தினார். அதானி மற்றும் அவரது குடும்பத்தினர் 11. 60 இலட்சம் கோடி ரூபாய் சொத்துக்களுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

அதானியின் சொத்து கடந்த ஓராண்டில் 95 சதவீதம் உயர்ந்துள்ளது. ஹிண்டன்பர்க் அறிக்கையால் ஏற்பட்ட சரிவுக்கு பிறகு அவரது சொத்து கடந்த ஒருவருடத்தில் வேகமாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டைவிட 95 சதவீதம் சொத்து மதிப்பு உயர்ந்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அவருக்கு 1,021,600 கோடி ரூபாய் சொத்து குவிந்துள்ளது. இந்தியாவின் பணக்காரர் பட்டியலில் இரண்டாம் இடத்தில் 10.14 இலட்சம் கோடி ரூபாய் சொத்துக்களுடன் முகேஷ் அம்பானி உள்ளார். (எ)

# பாடசாலை பேருந்து மோதி சீனாவில் 11 பேர் உயிரிழப்பு

பீஜிங், செப். 04

சீனாவில் பாடசாலை பேருந்து பொதுமக்கள் மீது மோதியதில் ஐந்து மாணவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் சன்டொங் மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் பலர் காயமடைந்துள்ளனர். சிலர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டாய்யன் நகரில் பாடசாலைக்கு வெளியே நின்று கொண்டிருந்த மாணவர்கள், பெற்றோர்கள் மீது பேருந்து மோதியதாக பொலிஸார் கூறினர்.

பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து இடம்பெற்றது. இதனால் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருந்தின் கீழ் பொதுமக்கள் சிக்குண்டுள்ளதை காண்பிக்கும் படங்கள், காணொலிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன. (எ)

# ஆந்திரா, தெலுங்கானாவில் வெளுத்து வாங்கிய மழை

## வெள்ளத்தில் சிக்கி 31 பேர் பலி பல இலட்சம் மக்கள் பாதிப்பு

ஹைதராபாத், செப். 04

இந்தியாவின் ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் கனமழை - வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்தது. இரு மாநிலங்களிலும் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் கடந்த சில நாட்களாக இடைவிடாமல் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், காட்டாற்று வெள்ளம் போல மழைநீர் பாய்ந்தோடுகிறது. ஆந்திராவில் என். டி. ஆர், கிருஷ்ணா, குண்டூர் உள்ளிட்ட பல மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடந்த 3 நாட்களாக ஆந்திராவில் பெய்த வரலாறு காணாத மழை மற்றும் வெள்ளத்தால் கிட்டத்தட்ட 4 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல கிராமங்கள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன. பல இடங்களில் ரயில் தண்டவாளங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதற்கிடையில் ஆந்திரா, தெலங்கானா முதல்வர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர் நரேந்திர மோடி மழை, வெள்ள பாதிப்பு நிலவரங்களைக் கேட்டறிந்ததோடு மத்திய அரசு தேவையான உதவிகளைச் செய்யும் என்று உறுதியளித்தார். இரண்டு மாநிலங்களிலும் ரயில் சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. (எ)


# கப்பல்களை இலக்கு வைத்து கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்

சனா, செப். 04

செங்கடலில் சரக்கு கப்பல்களை இலக்கு வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

ஹமாஸுக்கு ஆதரவு வழங்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை இலக்கு வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், செங்கடலில் சென்றுகொண்டிருந்த எண்ணெய் கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து கப்பலில் இருந்த மாலுமிகள் 30 பேரை பிரான்ஸ் கடற்படையினர் மீட்டனர். ஆனால், ஒரு மில்லியன் பேரல் எண்ணெய் உடன் பயணித்த அந்த கப்பல் கைவிடப்பட்டது.



இந்த நிலையில், செங்கடலில் ஏற்கனவே கைவிடப்பட்ட அந்த எண்ணெய் கப்பல் மீதும் மற்றொரு சரக்கு கப்பல் மீதும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தினர். இதில் சரக்கு கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கப்பல்மீதோ, மாலுமிகளுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் எண்ணெய் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கப்பலில் தீப்பற்றியுள்ளது. தீப்பற்றியுள்ள கப்பலில் ஒரு மில்லியன் பேரல் எண்ணெய் இருப்பதால் ஒருவேளை கப்பல் முழுவதும் தீ பரவும் பட்சத்தில் கடற்பரப்பில் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. (எ)

# தற்கொலைப்படை தாக்குதலால் ஆப்கானிஸ்தானில் ஆறு பேர் பலி!

காபூல், செப். 04

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தற்கொலைப்படைத் தாக்குதலில் சிக்கி ஆறு பேர் பலியாகினர்.

காபூல் நகரில் உள்ள காலா உ பக்தியார் பகுதியில் நிகழ்ந்த [illegible] உட்பட 6 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டின் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கொடூரத் தாக்குதலில் 13 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தாக்குதலுக்கு இது வரை எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பொலிஸாரால் குடும்பஸ்தர் சித்திரவதை!

## விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், செப். 04

**சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவுவேளை அத்துமீறி நுழைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் குடும்பஸ்தரை எவ்வித காரணமும் கூறாது கைது செய்துள்ளதாகவும், கைது செய்த பின்னர் அவரை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகவும் பாதிக்கப்பட்டவரின் மனைவி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 28ஆம் திகதி நள்ளிரவுவேளை எமது வீட்டின் மதில் ஏறி பாய்ந்து, வீட்டின் முன் பக்க கதவைக் கால்களால் உதைத்து உடைத்து வீட்டினுள் அத்துமீறி நுழைந்த சுன்னாகம் பொலிஸார் எனது கணவரை தாக்கிக் கைது செய்தனர்.

கணவரை எதற்காக கைது செய்கிறீர்கள் என கேட்டவேளை,அதற்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை. கணவரின் கைதை தடுக்க நிறைமாதக் கர்ப்பிணியான நானும் , கணவரின் அண்ணாவின் பெண் பிள்ளைகளும் முயன்றவேளை எம்மையும் தாக்க முற்பட்டனர்.

கணவரின் அண்ணாவின் மகள் கைத்தொலைபேசியை கையில் வைத்திருந்தவேளை, வீடியோ எடுக்கிறீயா என அதைப் பறித்து உடைக்க முயன்றனர்.

நாம் கணவரை பொலிஸார் காரணமின்றி கைது செய்து அழைத்துச் செல்வதனை தடுக்க முயன்றபோதிலும் எம்மை தாக்குவது போன்று அச்சுறுத்தி கணவனை வீட்டில் இருந்து இழுத்துச் சென்று வெளியில் நின்ற முச்சக்கர வண்டியில் ஏற்றி சென்றனர்.

கணவனை அழைத்து செல்லும்போதே கண்களை கட்டியுள்ளனர். பின்னர் யாருடனோ தொலைபேசியில் பேசிய தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர், கணவனின் பெயரைக் கூறி, அவரை கைது செய்துவிட்டோம் எனக் கூறியுள்ளார்.

நாம் நள்ளிரவே சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்றபோது, கணவனை அடித்து துன்புறுத்தி இருந்தனர். அது தொடர்பில் கேட்டபோது, சந்தேகத்தில் கைது செய்துள்ளோம் எனக் கூறி எம்மை அங்கிருந்து அனுப்பிவிட்டனர்.

மறுநாள் 29ஆம் திகதி நாம் யாழ் . மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகம் சென்று முறையிட்டோம். அவர் அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தொலைபேசியில் விசாரித்தார். அவர்கள் ஏதோ கூற எம்மை அனுப்பி வைத்தார்.

நாங்கள் மீண்டும் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்றவேளை, கணவரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரான உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்டோர் பைப், வயர்களால் மிக மோசமாக தாக்கி சித்தரவதை புரிந்துள்ளனர்.

கணவனை நிலத்தில் முழங்காலில் இருந்தி தாக்கியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கானவர் சத்தி எடுத்துள்ளார்.

கணவரை கைது செய்த பொலிஸார் 24 மணி நேரம் கடந்தும் நீதிமன்றில் முற்படுத்தாது, சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மிகமோசமான முறையில் சித்தரவதைக்கு உள்ளாகியுள்ளனர்.

பின்னர் அவரை விடுவித்துள்ள நிலையில் நாம் அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளோம். தற்போது எனது கணவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்-என்றார்.

அதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது எனவும், பாதிக்கப்பட்ட நபரை திங்கட்கிழமை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் நேரில் பார்வையிட்டு, அவரது வாக்கு மூலங்களை பெற்றுள்ளதாகவும், அதன் அடிப்படையில் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார். (அ)

# எம்.பியானர் பரணவிதான!

கொழும்பு, செப். 04

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக கருணாரத்ன பரணவிதான சபாநாயகர் முன்னிலையில் நேற்று பதவியேற்றார்.

செப்ரெம்பர் மாத முதலாம் அமர்வு வாரத்தின் 1ஆம் நாள் அமர்வு நேற்று காலை 9.30 இற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் ஆரம்பமானது. இதன்போது இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக கருணாரத்ன பரணவிதான சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தலதா அத்துக்கோரள இராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனவரி முதலாம் திகதி முதல் கல்வித்துறை டிஜிற்றல் மயம்!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, செப். 04

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் கல்வித்துறை டிஜிட்டல் மயமாக்கப்படும் என, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரத்தை கடந்த 02 வருடங்களுடன் ஒப்பிடும் போது பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அரச வருமானம் உயர்வடைந்ததுடன் மொத்த தேசிய உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

அரச துறையில் டிஜிற்றல் மயமாக்கலினூடாக, மாற்றங்களை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை, கல்வித்துறை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் கல்வித்துறை டிஜிற்றல் மயமாக்கப்படும். அவ்வாறானதொரு சூழ்நிலையில் தரம் ஒன்று முதல் பத்து வரையாள மாணவர்களின் புத்தக சுமை குறைக்கப்படும். சர்வதேச தொழில்வாய்ப்புகளுக்கு முகம்கொடுக்கும் வரையில் தொழில்நுட்ப பாடவிதானங்கள் மேம்படுத்தப்படும்.-என்றார். (அ)

# தேர்தல் குறித்து கருத்துக்கணிப்புகளில் ஈடுபடுவோரை கைது செய்ய உத்தரவு!

கொழும்பு, செப். 04

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்துக்கணிப்புகளை மேற்கொள்பவர்களை உடன் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மேலதிக வகுப்புகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக கருத்துக் கணிப்புகள் மேற்கொள்ளப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அவ்வாறானவர்களை இனங்கண்டு கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# மனைவியை கோடரியால் தாக்கி கொன்ற கணவன்!

கொழும்பு, செப். 04

கணவன் தனது மனைவியை கோடரியால் தாக்கி கொலை செய்துள்ள சம்பவமொன்று அவிசாவளை, கெடஹெத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இக்கொலைச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திவுரும்பிட்டிய, கெடஹெத்த பிரதேசத்தில் வசித்து வந்த 43 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும் சந்தேக நபருக்கும் இடையிலான குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர்களின் நேரடி விவாத திகதி அறிவிப்பு

கொழும்பு, செப். 04

ஜனாதிபதி வேட்பாளர்களின் நேரடி விவாதத்திற்காக அனைத்து நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மார்ச் 12 இயக்கத்தின் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 7, 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த விவாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் பங்கேற்புடன் இந்த விவாதத்தின் முதல் சுற்று எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் என்றும், இந்த விவாதத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது சுற்றுகளில் சுமார் 12 வேட்பாளர்கள் பங்கேற்பார்கள் என்றும் மார்ச் 12 இயக்கம் அமைப்பு தெரிவித்துள்ளது.

முதல் நாள் விவாதத்தில் சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை அனுரகுமார திஸாநாயக்க பங்கேற்கவுள்ளதை மார்ச் 12 இயக்கத்தின் அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# டெங்கு பரவக்கூடிய வாய்ப்பு அதிகரிப்பு

கொழும்பு, செப். 04

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 36,728 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 9,012 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# சுற்றுலாப்பயணிகள் வருகையில் வீழ்ச்சி

கொழும்பு, செப். 04

இலங்கைக்கான வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை கடந்த ஒகஸ்ட் மாதத்தில் எட்ட [illegible] இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 2 இலட்சத்து 2,907 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், கடந்த மாத இறுதியில் குறித்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கமைய, ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 609 சுற்றுலாப் பயணிகளே கடந்த ஒகஸ்ட் மாதத்தில் நாட்டை வந்தடைந்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரழிந்துள்ள...

சிலர் பொறாமைப்படுகின்றனர் - சிலர் எரிச்சல்படுகின்றனர் - சிலர் எச்சரிக்கை செய்கின்றனர். அவ்வாறான வர்களை சிரிப்போடு கடந்து செல் வோம். அவர்களின் பெயர்களைக்கூறி அவ்வாறானவர்களை பிரபலப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. தவறுகள் என்பது எல்லோரிடமும் இருக்கின்றன. தவறு இழைத்தவர்கள் அத்தனைபேரும் வருகின்ற 22ஆம் திகதி தமிழ் மக்கள் அளிக்கும் முடிவைப்பார்த்து திருந்துவார்கள்.

சீரழிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமைய வேண்டும். சில கட்சிகள் பொது வேட்பாளரை ஆதாரிக்காவிடில் அது செய்தி அல்ல. சங்கை ஆதரித்தால் அதுதான் செய்தி 21 ஆம் திகதிக்கு இடைபட்ட நாட்களில் பல்வேறு கதைகள் வரும் - வதந்திகள் வரும். மக்கள் அவை எதையும் பொருட் படுத்தாது சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தவறிழைப்பவர்களுக்கு தகுந்த பாடத்தை புகட்ட வேண்டும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி தமிழ் மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழர் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## அரச...

தேர்தல் பிரசார விளம்பர சுவரொட்டிகள், கட் அவுட்களை அரசு கட்ட டங்கள் மற்றும் அவற்றின் வளாகங்களில் காட்சிப்படுத்தவோ அல்லது சேமிக்கவோ அனுமதிக்கக்கூடாது. அரசியல் காரணங்களுக்காக அதிகாரி கள் விடுப்பு எடுக்கவோ அல்லது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவோ கூடாது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## தனியார்...

நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, "வாழ்க்கைச் செலவு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலையை கருத்தில்கொண்டே இந்த சம்பள அதிகரிப்பை மேற்கொண்டுள்ளோம். 17 ஆயிரத்து 500 ரூபாய் அடிப்படை சம்பளத்துடன் 2016 வரவு - செலவு திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட 3 ஆயிரத்து 500 ரூபாயும் வழங்கப்பட வேண்டும். இஅதன் பிரகாரம் தனியார் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச அடிப்படை சம்பளமாக 21ஆயிரம் ரூபாய் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது", என்று தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார். (ஐ)

## தபால்...

இன்றும் நாளை மறுதினமும் சிரேஷ்ட உதவி மற்றும் உதவி பொலிஸ் பணிமனைகள், பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை பொலிஸ் நிலையங்கள், விசேட அதிரடிப்படை முகாம்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவு பணிமனைகளை சேர்ந்தவர்கள் தமது வாக்குகளை பதிவு செய்ய முடியும்.

நாளையும் நாளை மறுதினமும் முப்படைகளின் முகாம்கள் மற்றும் ஏனைய அரச திணைக்களங்களை சேர்ந்தவர்கள் வாக்குகளை பதிவு செய்ய முடியும்.

இந்த நாட்களில் வாக்களிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 11, 12ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அலுவலக அடையாள அட்டையை பயன்படுத்தும் சந்தர்ப்பம் நேர்ந்தால் தெரிவத்தாட்சி அதிகாரியால் நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்த வேணடும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## விவசாயிகளின்...

விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் வழங்கும் நோக்கில் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## தெல்லிப்பழை...

திகதி திருமஞ்சத் திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து எதிர் வரும் 13ஆம் திகதி வெள் ளிக்கிழமை சப்பை ரதத் திருவிழாவும் அடுத்த நாள் 14ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ)

## நாடு...

ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பவற்றை கண்டித்தே இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு மற்றும் கண்டனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## அநுர...

செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த சந்திப்பில், "ஜனாதிபதி வேட்பாளர் அநுர ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டை திருடியவர்கள் - சூறையாடியவர்களை பிடித்து சிறையில் அடைப்பார் என்பது உண்மையான விடயம். ஆனால், அவரால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டங்களோ அல்லது சர்வதேச ஒத்துழைப்பையோ அவரால் பெற முடியாது.

"நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் அவர்கள் சீனாவின் உதவியை நாடவேண்டிய தேவை ஏற்படும். ஏற்கனவே, நாடு சீனாவின் கடன்பொறிக்குகள் சிக்கியுள்ள நிலையில் நாட்டு மக்கள் அதனை விரும்ப மாட்டார்கள். அது மட்டுமல்ல தேசிய மக்கள் கட்சியினர் சீனாவின் கொள்கைகளுடன் ஒத்துப்போகும் நிலையில் அவர்கள் ஆட்சிக்கு வருவார்களானால் இலங்கைத் தீவின் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும். - என்றார். (ஐ)

## தனக்குத்...

வேண்டும் என்ற கோரிக்கையுடன் தமிழ்த் தேசிய கட்டமைப்பாக நாம் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேத்திரனை களமிறக்கியுள்ளோம்.

"தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸநாயக்க, நாமல் ராஜபக்ஷ ஆகிய நால்வரும் ஒற்றையாட்சி சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு அதன் வழி நடப்பவர்கள்.

"சஜித் பிரேமதாஸ ஒற்றையாட்சிக்கு வெளியே சென்று தீர்வு காணுவதாக மூச்சுக்கூட விடவில்லை. 13ஆம் திருத்தத்தைப் பற்றி பேசி இருக்கிறார். புதிய அரசியல் யாப்பை ஏற்படுத்தும் வரையில் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்த உள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால், இணைப்பாட்சி பற்றியோ - ஒற்றையாட்சி பற்றியோ எங்கேயும் குறிப்பிடவில்லை.

"இந்த நிலையில்தான் தமிழ் அரசு கட்சியினர் அவசரமாகக்கூடி சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிப்போம் என்று கூறியுள்ளனர். இதன்மூலம், தமிழ் அரசு கட்சி தமிழ் மக்களுக்கு எதனை சொல்கிறார்கள் என்பதனைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

"இதுவரை காலமும் ஒற்றையாட்சிக்குள் இருந்து எம்மை விடுவிக்க வேண்டும் என நாம் தொடர்ந்து அரசியல் ரீதியாக போராடி வரும் நிலையில், ஒற்றையாட்சியின் வழி நடக்கும் சஜித் பிரேமதஸவை ஆதரித்துள்ளார்கள். இவர்களின் நோக்கம் என்ன? ஆகவே, மக்கள் தமிழ் அரசுக் கட்சியின் நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்"- என்றார். (ஐ)

## தமிழரின்...

10 அம்சங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அந்தத் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

தமிழர்களுக்கு பொருளாதாரப் பிரச்னைகள்தான் உண்டு என்று தொடர்ச்சியாக ஆட்சிக்குவரும் அரசாங்கங்கள் கூறிவரும் பின்னணியில், இனப்பிரச்னையை பேசுபொருளாக்கி, அதன்மீது தென்னிலங்கையினதும் உலகத்தினதும் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் நாம் அரியநேத்திரனைப் பொதுவேட்பாளராகக் களமிறக்கியிருக்கின்றோம்.

கடந்த 46 ஆண்டுகளாக தமிழர்கள் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கே வாக்களித்து வந்திருக்கிறார்கள். இருப்பினும் அவர்களில் வென்றவர்களும் சரி, தோற்றவர்களும் சரி இன்றுவரையிலும் இனப்பிரச்னைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வைத் தரவுமில்லை. இனவழிப்பு செயல்பாடுகளை நிறுத்தவுமில்லை. கடந்த 46 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு பதில் வினையாற்றும் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டு இந்த முறை தமிழ்மக்கள் செயல்முனைப்போடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்று எடுக்கப்பட்ட முடிவின் விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களை ஒரணியாகத் திரட்டுவார். இதேசமயம், இனப்பிரச்னைக்கான தீர்வை நோக்கித் தமிழ் மக்களின் கூட்டு விருப்பத்தை உலக சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவார். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவார். இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது இனப் பிரச்னைக்கான நிரந்தர தீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

இனப்பிரச்னையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத்தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப் படுத்தலாம். எனவே புதிய யாப்பு ஆனது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசங்களின் ஒன்றிணைவாக அமைய வேண்டும். அதாவது புதிய யாப்பானது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் கட்டமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவோர் அரசியல் தீர்வாலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஒருபோதும் திருப்திப் படுத்த முடியாது.

இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதனை தாமே நிர்ணயிப்பதற்குப் பொருத்தமான பன்னாட்டு ஏற்பாடுகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த தற்போதைய வடக்கு - கிழக்கு மாகாணங்களை எல்லையாகக் கொண்டு அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகுக்குள் முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சு நடத்தத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புத் தயாராக உள்ளது.

மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வரும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். இதுவரையிலுமான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக ஐ. நா. பொதுச் செயலர் பொறுப்பு கூறலை ஐ. நா. பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப் பறிப்பைத் தடுக்கவும் நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதார கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புலம் பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர் தேசத்துக்கு இருக்க வேண்டும்.

தமிழ்க் கடலில் தமிழ் மீனவர்களுடைய கடல் இறைமை உறுதி செய்யப்பட வேண்டும்.

ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளரான பா. அரியநேத்திரனின் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காகவுமே முன் நிறுத்தப்படுகிறார். ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது, அரியநேத்திரனுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான். எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜெனிவா ஊடாக ஆதாரங்களை திரட்டும் பொறிமுறைக்கு எதிர்ப்பு!

## அமைச்சர் அலி சப்ரி அறிவிப்பு

கொழும்பு, செப். 04

**நாட்டுக்கு எதிராக ஜெனிவா ஊடாக வெளியில் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை இடம்பெற்றுவருவதாகவும் அதற்கு தமது முழுமையான எதிர்ப்பை வெளியிடுவதாகவும் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் நீதி, சிறைச்சாலைகள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டு தீர்ப்புகளை பரஸ்பரம் ஏற்று அங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்தல் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டை பாராளுமன்றத்தில் நேற்று முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமது நாட்டின் இராணுவத்தினரை நாம் காட்டிக்கொடுக்கப் போவதில்லை. எமக்கு மூளை சரியில்லை என்று நினைக்க வேண்டாம்.

ஜெனிவா ஊடாக வெளியில் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை இடம்பெற்று வருகிறது. அரசாங்கம் என்ற வகையில் நாம் அதனை முழுமையாக எதிர்க்கிறோம்.


உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு இலங்கையில் மாத்திரமல்ல சுமார் 43 நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

இந்தப் பிரச்னைக்கு உள்நாட்டில் தீர்வு காண்பதே எமது நோக்கமாகும். ஆதலால் வெளிநாட்டு தலையீடுகளை நிறுத்த வேண்டியுள்ளது.

இந்த விடயத்தில் தண்டிப்பதற்கான அதிகாரத்தை யாருக்கும் கொடுக்கவில்லை. இது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றே குறிப்பிடுகிறோம்.

அரசியலமைப்பின் பிரகாரம் உள்நாட்டிலேயே பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதனால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் - என்றார். (அ)

## சஜித்தின் பிரசாரக் கூட்டத்தில் ஐரோப்பிய கண்காணிப்பு குழு



வவுனியா, செப். 04

வவுனியா வைரவபுளியங்குளத்தில் இடம்பெற்ற சஜித் பிரேமதாசவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் அவதானத்தை செலுத்தினர்.

அங்கு இடம்பெற்ற தேர்தல் பிரசார செயற்பாடுகள் மற்றும் கலந்துகொண்ட மக்களுடைய செயல்பாடுகள் தொடர்பிலும் அவர்கள் அவதானம் செலுத்தி இருந்ததை அவதானிக்க முடிந்தது. (அ)

# மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் தமிழருக்கு எதிராக செயல்படும் ரணில்!

## சபையில் சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 04

மாகாண சபை தேர்தலை நடத்தாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ராஜபக்ஷக்களுடன் இணைந்து, தமிழர்களுக்கெதிராக இனவாதத்துடன் செயற்படுவதாக, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை சட்டத்தின் கீழ், சிறப்புரிமை கேள்வியை முன்வைத்து இந்த விடயத்துக்கு தீர்வு அவசியமென வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபை தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கான தனிநபர் பிரேரணையை நான் முன்வைத்திருந்தேன் அதன் 02ஆம் வாசிப்பு வாக்கெடுப்பின்றி பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன் 03ஆம் வாசிப்பை சபை யில் நேற்று முன் வைப்பதாக தீர்மா னிக்கப்பட்டிருந்தது. எனினும், பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் அது உள்ளடக்கப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கக்கூடாதென இலங்கை தமிழரசுக் கட்சி தீர்மானித்ததால் அவர் திட்டமிட்ட வகையில், இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கிறார் - என்றார்.

இதேவேளை, சுமந்திரன் எம்.பி க்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கருத்து வெளியிட்டார்.

மாகாண சபைகள் கடந்த 07 வருடங்களுக்கு மேலாக இயங்காமல் இருக்கின்றன. தேர்தலினூடாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படாததால் மக்களின் ஜன நாயக உரிமை மீறப்படுகிறது.

சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட பிரேரணை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.



எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தனது நிலைப்பாட்டை சபையில் வெளியிடுகையில் -

மாகாண சபைகள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. தேர்தல் காலத்தில், அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆதலால், மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு நாம் உதவுகிறோம்.

சுமந்திரனின் பிரேரணை மீதான 03ஆம் வாசிப்பை இன்றைய ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு அரசாங்கம் இணங்கியிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் அது தவிர்க்கப்பட்டது - என்றார்.

# மோசடியாளரிடம் சிக்க வேண்டாம்!

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 04

தம்மை பொதுச் சுகாதார பரிசோதகர்களாக காட்டிக்கொண்டு பணம் பறிக்கும் மோசடியில் ஈடுபடும் நபர்களிடம் சிக்க வேண்டாம் என வர்த்தகர்களிடம் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக் காலமாக தம்மை பொதுச் சுகாதார பரிசோதகர்களாக காட்டிக்கொண்டு, வியாபாரிகளுக்கு சலுகைகளை வழங்க அல்லது வழக்குத் தாக்கல் செய்யாமல் இருக்க என தெரிவித்து பணம் கோரும் மோசடிகள் தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளில் வியாபார நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தொலைபேசி ஊடாக அழைத்து, தம்மை பொதுசுகாதார பரிசோதகராக அல்லது பொலிஸாராக காட்டிக் கொண்டு பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் சில மோசடியாளர்கள் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவ்வாறான அழைப்புகள் கிடைத்தால் அது தொடர்பில் தமது பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் அலுவலகத்துக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

## எதிர்க்கட்சிக்கு நான் செல்வது தனிப்பட்ட ஆதாயத்துக்கல்ல!

### சபையில் மொட்டு எம்.பி விளக்கம்

கொழும்பு, செப். 04

எதிர்க்கட்சிக்கு நான் செல்வது தனிப்பட்ட ஆதாயத்திற்காக அல்ல என்றும் மக்கள் நலனுக்காகவே இந்த தீர்மானத்தை எடுத்ததாகவும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்து எதிர்க் கட்சியில் அமர்ந்தார்.

இந்நிலையில் அவரை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைகூப்பி வணக்கம் செலுத்தி அவரை வரவேற்றனர்.

அவர் அங்கு தெரிவிக்கையில்-

"பொதுஜன பெரமுன ஊடாக தான் எனக்கு மக்கள் ஆணை கிடைத்தது. தற்போது அந்த கட்சியிலும் பிளவு ஏற்பட்டுள்ளது.

எனவே, துயரப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றேன்.

ஆகவே ஏழைகளின் பக்கம் இருக்கின்ற ஒருவருக்காக எனது ஆதரவை தெரிவிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றேன்.

ஆகவே நான் எதிரணிக்கு செல்ல எதிர்பார்க்கின்றேன். இதுவரை காலமும் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன்.

இந்த நாட்டிலே சமுர்த்தி மற்றும் அஸ்வெசும ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாங்கள் நீதியை நிலைநாட்டுவோம்.

தாம் இன்று எதிர்க்கட்சிக்கு செல்வது தனிப்பட்ட ஆதாயத்திற்காக அல்ல என்றும் மக்கள் நலனுக்காகவே - என்றார். (அ)

# 15 வயது மகன் கார் செலுத்திய சம்பவம் சட்டத்தரணிக்கும் மகனுக்கும் அபராதம்!

கொழும்பு, செப். 04

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தனது 15 வயது மகனை காரை ஓட்ட அனுமதித்த சட்டத்தரணி மற்றும் காரை ஓட்டிய அவரது மகனுக்கு பாணந்துறை பிரதான நீதவான் சம்பிகா ராஜபக்ஷவினால் ரூ. 55000 அபராதம் விதிக்கப்பட்டது.

புத்தளத்தில் வசிக்கும் 42 வயதுடைய சட்டத்தரணி மற்றும் அவரது மகனுக்கே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் இவ்வாறான செயல்களில் ஈடுபட வேண்டாம் எனவும் நீதவான் கடுமையாக எச்சரித்துள்ளார்.

சட்டத்தரணி தனது குடும்ப உறுப்பினர்களுடன் அண்மையில் தங்காலை பிரதேசத்தில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில், அவர் தனது 15 வயது மகனுக்கு மத்தளவில் இருந்து கட்டுநாயக்காவுக்கு காரை செலுத்த அனுமதித்துள்ளார். இந்த சம்பவத்தை மற்றொரு வாகன ஓட்டி வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய தெற்கு அதிவேக வீதியின் கெலனிகம போக்குவரத்து பொலிஸார், காரின் பதிவு இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது காரின் உரிமையாளர் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டார்.

சாரதி உரிமம் இல்லாமல் தனது வயதுக்குட்பட்ட மகனை கார் ஓட்ட அனுமதித்த குற்றத்திற்காக காரின் பதிவு உரிமையாளரான சட்டத்தரணியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர், ரூ. 25,000 அபராதம் நீதவானால் விதிக்கப்பட்டது, மேலும் மகனுக்கு சீட் பெல்ட் அணியாதது மற்றும் குறைந்த வயதில் வாகனம் ஓட்டியதற்காக ரூ. 30,000 அபராதம் விதிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.